16.02.2026

OS No: 564/2019

பி.வா.சா.1 - ராமையா த/பெ. கருப்பையா

**DW1 மீண்டும் அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி**

எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 14.04.2018ம் தேதியில் கோவில் நிர்வாக குழு அமைத்து தலைவர், செயலாளர், செயற்குழு உறுப்பினர்கள் ஆகியோர் தேர்வு செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது, தீர்மானம் தாக்கல் செய்யும் நோட்டில் 5ம் பக்கத்தில் மேற்படி தீர்மானம் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 22.04.2018ம் தேதியில் கோவில் கட்டிடபப்ணி செய்வதற்கான தீர்மானம் மேற்படி தீர்மானத்திற்கான நோட்டில் பக்கம் 7ல் உள்ளது. மேற்படி தீர்மானம் **பி.வா.சா.ஆ. 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 20.05.2018ம் தேதியில் கோவில் பாலாலயம் செய்வதற்கான தீர்மானம் மேற்படி தீர்மானத்திற்கான நோட்டில் பக்கம் 9ல் உள்ளது. மேற்படி தீர்மானம் **பி.வா.சா.ஆ. 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 27.07.2018ம் தேதியில் கோவில் கட்டுவது சம்மந்தமாக ஸ்தபதிகளிடம் ஒப்பந்த புள்ளி பெறுவது சம்மந்தமாக கட்டிட திருப்பணி செய்ய பூமி பூஜை செய்வதற்கான தீர்மானமும், அனைத்து வைபங்களுக்கும் கிராம மக்களை அழைக்க வேண்டி தீர்மானம் ஏற்படுத்தப்பட்டது. மேற்படி தீர்மானம் தீர்மானத்திற்கான நோட்டில் பக்கம் 11ல் உள்ளது. மேற்படி தீர்மானம் **பி.வா.சா.ஆ. 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 15.04.2018ம் தேதிய புணரமைப்பு மாதிரி கட்டிட வடிவமைப்பு மற்றும் வரைபடம் ஸ்தபதியிடம் பெற்ற முனைவு (கொட்டேசன்) மதிப்பு **பி.வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. பழைய ஆலயத்தின் அமைப்பு புகைப்படம் அதற்கான சிடி மற்றும் 65 பி சான்று **பி.வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**மேற்கண்ட பிவாசாஆ1 முதல் 6 வரை கண்ட ஆவணங்கள் வாதி தரப்பில் Subject to relevancy என்ற அடிப்படையில் குறியீடு செய்திட வேண்டுமென ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.**

வாதி தரப்பில் குறுக்குவிசாரணைக்கு கால அவகாசம் கோரி வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2026.02.16 12:46:30 +0530